நகல்:-

**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை - மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கீழ் உள்ள அனைத்து மாவட்ட நடமாடும் சிகிச்சை பிரிவு வாகனங்களில் பணியாற்றும் ஊர்தி ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு தொகுப்பூதியத்தினை முறையே ரூ.10,000/- லிருந்து ரூ.12,000/- மற்றும் ரூ.5000/- லிருந்து ரூ.8,000/- ஆக உயர்த்தி வழங்குதல் - ஆணை- வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2)த் துறை**

அரசாணை (நிலை) எண்.05

நாள் :22.07.2021
பிலவ, ஆடி 06,
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.70, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 17-07-2013.
2. அரசாணை (நிலை) எண்.32, மாற்றுத் திறனாளிகள் நலத்(மாதிந2) துறை, நாள்.26.10.2016
3. மாற்றுத்திறனாளிகள் இயக்குநர் ந.க.எண்.1723/உ_உ_பிரிவு/2017, நாள்.18.12.2017, 10.11.2018 மற்றும் 13.07.2020.

******

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 0 முதல் 6 வயது வரை உள்ள மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான 32 நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் தொடங்க அனுமதி மற்றும் ரூ.4.49 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அனைத்து மாவட்ட நடமாடும் சிகிச்சை பிரிவுகளில் ஓட்டுநர் பணியிடத்திற்கான தொகுப்பூதியத்தை மாதம் ஒன்றிற்கு ரூ.10,000/- ஆக 01-10-2016 முதல் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடிதத்தில், நடமாடும் சிகிச்சைப்பிரிவு வாகனத்தின் மூலம் தேவையான உபகரணங்கள் கொண்டு, Physiotherapy உதவியுடன் மாற்றுத்திறனாளி குழந்தைகள் நலன் கருதி, அவர்கள் வசிக்கும் இருப்பிடத்திற்கே சென்று Physiotherapy வழங்கும் விதமாக, 32 மாவட்டங்களிலும் ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், இவர்களுக்கு மாதந்தோறும் தொகுப்பு ஊதியமாக

ஓட்டுநர்களுக்கு ரூ.10,000/- வீதமும், ஊர்தி உதவியாளர்களுக்கு ரூ.5,000 வீதமும் வழங்கப்பட்டு வருகிறது என்றும் மேற்காணும் பணியானது மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு மிகவும் அவசியமானதாக உள்ள காரணத்தினால், நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகன ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்களின் ஊதியத்தினை முறையே ரூ.10,000/- லிருந்து ரூ.15,000/- ஆகவும் மற்றும் ரூ.5,000/- லிருந்து ரூ.10,000/- ஆக உயர்த்தி வழங்குமாறும், இத்தொகுப்பூதிய உயர்வினால் ஏற்படும் கூடுதல் நிதியை ஒதுக்கீடு செய்து உரிய ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்.

4. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலினை செய்த அரசு, நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்களுக்கான ஊர்தி ஓட்டுநர்களின் மாத தொகுப்பூதியத்தை ரூ.10,000/- லிருந்து ரூ.12,000/- ஆகவும் மற்றும் உதவியாளர்களின் மாத தொகுப்பூதியத்தை ரூ.5,000/- லிருந்து ரூ.8,000/- ஆக உயர்த்தியும், அரசு ஆணையிடுகிறது. மேலும், நடப்பு ஆண்டிற்கான இத்தொகுப்பூதிய உயர்வு அரசாணை வெளியிடும் நாள் முதல் வழங்கப்படும்.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் -02 சமூக நலன்- 101 மாற்றுத் திறனாளிகள் நலன்- மாநிலச் செலவினங்கள் - MV மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள்-333 - தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் 04 ஒப்பந்த ஊதியம்."
>
> (IFRMS த.தொ.கு: 2235 02 101 MV 33340)

6. மேலே பத்தி 4ல் வழங்கப்பட்டுள்ள தொகுப்பூதி உயர்வினால் ஏற்படும் ஆண்டு தொடர் கூடுதல் செலவினம் ரூ.19,20,000/- நடப்பாண்டில் தேவைப்படும் கூடுதல் செலவினத் தொகை ரூ.12,80,000/- 2021-2022ம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவு திட்ட மதிப்பீடு / திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். எனினும் 2021-2022ம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம் இச்செலவினம் சட்டப் பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி4-இல் அனுமதிக்கப்பட்ட உயர்த்தப்பட்ட தொகுப்பூதியத்தினை பெற்று வழங்கிட மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் 2021-2022ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் இத்தொகையை சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த வரவு திட்ட மதிப்பீடு / திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு

உரிய கருத்துருவையும் தவறாது நிதி (சந)/வ.செ.பொ-1) துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.27342/நிதி(சந)/2021, நாள்.22.07.2021-ன் பெற்ற இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.223 (இருநூற்று இருபத்து மூன்று) உடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர்.லால்வேனா,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>

மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர்,சென்னை-5/35.
தலைமைக் கணக்காயர், சென்னை-18/35
தலைமைக் கணக்காயர், சென்னை- 18/35 (பெயரில்)

<u>நகல்:-</u>

நிதி (சந/வ.செ.பொ-II/வ.வ-I) த் துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
இருப்பு கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்